விலைரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 12 ஜ. ஆகிர் 30 இதழ் 71

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 25—4—82

## இந்துமாநாட்டுப்பேராளர்கள் நாளை யாழ். வருகின்றனர்

[யாழ்ப்பாணம்]

அகில உலக இந்து மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை வந்திருக்கும் வெளிநாட்டுப் பேராளர்களின் வடமாகாணக் கலாசாரச் சுற்றுலா இம்மாதம் 26ம், 27ந் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

26ந் திகதி இரவு பத்து மணிக்கு செம்மணி நுழை வாயிலில் யாழ். வரும் பேராளர்கள் வரவேற்கப்படுவர். தொடர்ந்து 10-15 மணிக்கு நல்லூர்க்கந்தசுவாமி கோவில் ஆலய முன்றலில் வரவேற்பு இடம்பெறும்.

27ந்திகதி காலை 6-45 மணிக்குத் தந்தை செல்வா நினைவாலயத்தில் அஞ்சலி செலுத்தியபின் அன்றைய சுற்றுலா ஆரம்பமாகும்.

காலை 8-30 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தையும் 9-36 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையும் பேராளர்கள் பார்வையிடுவர்.

இதற்கான ஒழுங்குகளை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கொண்டுள்ளார். காலை 10 மணிக்கு திரு. அ. அமிர்தலிங்கத்தின் பணியகத்தில் இவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்படும்.

10-45 மணிக்குப் பேராளர் கோஷ்டி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தை வந்தடையும். பாராளுமன்ற

(8ம் பக்கம் பார்க்க)

# "தமிழ்நாட்டைத் தவிர வேறு இடம் செல்லமாட்டோம்!"

## தாயகம் திரும்பிய தமிழர் 'நவம்' எம்.பி.யிடம் குமுறல்

சென்னை, ஏப். 24

"தமிழ்நாட்டில் வாழ வழியில்லாவிடில் மீண்டும் இலங்கைக்கே திரும்பி விட விரும்புகின்றோம். ஆந்திராவுக்கும், கன்னடத்துக்கும் நாம் போக விரும்பவில்லை".

சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் குடிபெயர்ந்து வந்து முகாமிலிருக்கும் இந்திய வம்சாவழியினரான ஏழைத்தொழிலாளி ஒருவர் தம்மைப் பார்க்க வந்த சாவகச்சேரி எம்.பி. திரு.வி.என். நவரத்தினத்திடம் இவ்வாறு கண்ணீர் சிந்தியபடி கூறினர்.

"நாங்கள் சிங்கள நாட்டில் வசிக்கும்பொழுதுஎமதுபிள்ளைகள் அங்கு பிறந்து வளர்ந்த போதிலும்அவர்கள் தனி தமிழிலேபடித்துபேசிவந்தார்கள். இலங்கை மலைநாட்டிலிருந்த தம்மை எமது தாய்நாடெனக் கருதி இங்கு வந்தால் எம்மை ஆந்திரப் பிரதேசத்திற்கும், கன்னடத்திற்கும் போகும்படி பணிக்கிறுர்கள். எமது பிள்ளை

(8ம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்களை

## இடைவழியில் நிர்மூலமாக்க ஆர்ஜண்டினு நடவடிக்கை

வாஷிங்டன், ஏப். 25

பிரிட்டிஷ கடற்படைக்கப்பல்களை கண்டுபிடித்து இடைவழியிலே நிர்மூலமாக்குவதற்கான நடவடிக்கைகள்ஆர்ஜன்டினு விமானநிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெற்கு தீவுக்கு 50 மைல் தூரத்தில் இரு பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள்காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்தே ஆர்ஜன்டினு, இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி புதிய யோசனைகளுடன் பிரிட்டன் திரும்பியுள்ளார்; இந்த யோசனைகள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு அலெக்ஸான்டர் ஹெய்த் ஆர்ஜன்டினு வெளியுறவுமந்திரியுடன் புதியயோசனைகள் பற்றி பேசியுள்ளார்.

தீர்மானங்களை உருவாக்கும்

## குழுநியமிக்காமைபற்றி பிரதிநிதிகள் அதிருப்தி

### சாதிவேற்றுமை பற்றி இன்று விவாதம்

(கொழும்பு)

அகில உலக இந்து மகாநாட்டின் ஆய்வுக் கருத்தரங்குகளில் இடம்பெற்ற விஷயங்கள் தொடர்பான தீர்மானங்களை உருவாக்குவதற்கான குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்து வெளிநாட்டுப் பிரதிநிகள் பலர் நேற்று அதிருப்தி தெரிவித்தனர்.

கருத்தரங்கின் குழுநிலை விவாதங்கள் நேற்று நடைபெற்ற பொழுது வெளிநாட்டு பிரதிநிகள் பலர் மேற்படி தீர்மானங்கள் தொடர்பான குழுக்களை நியமிக்கவேண்டும் என வலியுறுத்தினர்கள்.

குழுநிலை விவாதங்களுக்கு நேற்று முன்தினம் தலைமை வகித்த நீதியரசர் திரு. எஸ். சர்வானந்தாவும் நேற்று வகித்த முன்னுள் நீதியரசர் சிவசுப்பிரமணியமும் மேற்படி விஷயம் குறித்து தமக்கு ஒன்றும் தெரியவில்லை எனக்கூறினர்கள். இந்துசமயத்தில்அங்கு வருகை தந்த செலூக்க கருமுத்தலைவர் திரு. குலட்சுபண ஐயரிடம் இது பற்றி தெரிவிக்கப்பட்டபோது ஒன்றும்செய்ய முடியாது எனத் தெரிவித்தார். ஆய்வு அரங்குகளின் முடிவுகளை தீர்மானமாகவெளியிடும் வசதி இல்லையாயின் ஆய்வு கருத்தரங்கினுல் பயன் இல்லையென சில பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

மாநாட்டுக்கு விஜயம் செய்துள்ள இந்திய பேராளர்கள் நேற்று ஒன்றுகூடி இந்த மாநாட்டை ஒழுங்கு செய்த மைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். நேற்றுமுன்தினம் ஜிந்துப்

(8ம் பக்கம் பார்க்க)

அகில உலக இந்து மாநாடு

இன்றைய விசேட நிகழ்ச்சிகள்

1982 ஏப்ரல் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

மாண்புமிகு பிரதம மந்திரி ஆர். பிரேமதாச அவர்கள் கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாலை 4—30 மணிக்கு நடைபெறும் நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்கள்

சர்வதேச பண்டாரநாயக மண்டபம் பிற்பகல் 7-25

தமிழக ஆஸ்தான நர்த்தகி குமாரி சுவர்ணமுகி அவர்களின் நடனம்,

இராமகிருஷ்ண மண்டபம் பிற்பகல் 6-00

சூலமங்கலம் சகோதரிகள் இன்னிசைக் கச்சேரி

சுகததாஸ திறந்த வெளியரங்கு பிற்பகல் 6-30

இளையராஜா குழுவினர் இசை நிகழ்ச்சி

பிரதேசஅபிவிருத்தி, இந்துசமய இந்து கலாசார, தமிழ் அலுவல்கள் அமைச்சு,
244, காலி வீதி, கொழும்பு—04. (2967)

பொன்விழா அழைப்பு

அந்தோனிப்பிள்ளை அக்னேஸம்மா

எமது பெற்ருரின் திருமணப் பொன்விழாவை முன்னிட்டு 27-4-82 பிற்பகல் 5 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் நன்றித்திருப்பலி நடைபெறும். இந்தஅழைப்பை நண்பர்களும், உற்ருரும் உறவினரும் ஏற்று இறைவனுக்கு நன்றிகூற அழைக்கிறேம்.

அன்புடன்
பிள்ளைகள்,
"அருள்வில்லா" சில்லாலை,
பண்டத்தரிப்பு.

2960

தேவை

வாகன விற்பனை பிரதிநிதி

இனிப்பு ரொபி விற்பனையில் முன் அனுபவம் உடையவரும் கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். பிணை விபரம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கவரத்தக்க கமிஷன் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 1500/- முதல் ரூபா 2000/- வரை உழைத்திட வாய்ப்புண்டு.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி

கண்ணு இண்டஸ்ரீஸ்

சுன்னுகம்.

2956

பாருக்குள்ளே நல்லநாடு-12

# நாட்டியமாநாட்டில் ஒரு பட்டிமன்றம்!

நாட்டிய மகாநாட்டில் ஒரு பட்டிமன்றம் கூட இடம் பெற்றது 'நடனத்தில் நாட்டிய தர்மியினதும் லோகதர்மினியினதும் உருவங்கள்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஏ, என். பரதராமனும் டாக்டர் எஸ். கே. நாயரும் வாதிட்டார்கள்!

அபிநயம்; 'நாட்டிய தர்மி', 'லோக தர்மி' என்று இரு வகைப்படும்.

'நாட்டிய தர்மி என்பது, கலை வெளிப்பாட்டுடன் பாவனையால் ஒன்றை உணர்த்துவது, [I. E; Stylistic] 'லோகதர்மி' உள்ளுணர்வால் அப்படியே உணர்த்துவது [realistic] உதாரணமாக' அழுகையை வெளிப்படுத்த கண்ணீர் உகுப்பது போல் கைகளினால் காண்பிப்பது 'நாட்டிய தர்மி'; கண்ணீரையே உகுப்பது 'லோக தர்மி'.

இவை இரண்டிலும் நடனத்துக்கு எதுமுக்கியம் என்பதில் இவர்களிருவரிடையேயும் வாதம் நடைபெற்றது.

'நாட்டிய தர்மி' பொதுவாக வழக்கிலுள்ளதும் சுலபமானதுமாகும். ஆனால் 'லோக தர்மி சற்று சிரமமானது. புரிந்து கொள்ளுமாற்றல், கற்பனை, நிதானம் ஆகியவற்றோடு மன ஈடுபாட்டுடன் வெளிப்படுத்தவேண்டியது அநுபவ வெளிப்பாடாக அமைவது.

இவ் விவாதத்தினிடையே, இவற்றுடன் தொடர்புபட்ட தான 'சாத்விக அபிநயம்' பற்றியும் பத்மா குறிப்பிட்டார். அத்துடன், அபிநய வெளிப்பாட்டில் – பாவத்தில் பரத நாட்டியத்துக்கும் கதகளிக்குமுள்ள வேறுபாட்டையும் அவர் காண்பித்தார். யமன் கல்யாணியில் ''கிருஷ்ணா நீ பேகனே பாரோ......'' பாடலைப் பத்மா பாடி அபிநயித்த பின்னர், பத்மா பாட, டாக்டர் நாயர் கதகளியில் அதற்கு அபிநயித்தார்; அவை முழுவதும் களிப்பொலி எழுந்தது. ரஷ்யமொழி பாடலொன்றைக் கூட பத்மா பாடி, அதற்கும் அபிநயித்தார்.

க்ஷேத்தரக்ஞர், முத்துதாண்டவர், கானம் சிறி கிருஷ்ண ஐயர் ஆகியோரின் ஒவ்வொரு பதங்களை தெரிந்து திருமதி நிர்மலா ராமச்சந்திரன் செய்முறை விளக்கமளித்தார்,

திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் ஜயதேவரின் பாடல்கள் எப்படி அபிநயத்துக்கு வெகுலாவகமாக அமைகின்றன என்பதை அங்கு காண்பித்தார். கீதகோவிந்தத்துக்கும் நடனத்துக்குமுள்ள தொடர்பை விளக்கிய அவர். சில அஷ்டபதிகளுக்கு அற்புதமான அபிநயம் புரிந்தார்.

'பாடலிலும் ஆடலிலும் சகிவளம்' என்பது பற்றி திரு. கே. எஸ் சிறிநிவாசன் வாசித்த கட்டுரைக்கு 'கலாக்ஷேத்ரா'வின் திருமதி கிருஷ்ணவேணி லக்ஷ்மன் செய்முறை விளக்கமளித்தார் புதுடில்லியிலிருந்து வந்த சிறிநிவாசன், சங்க காலத்து இலக்கியங்களையெல்லாம் ஆராய்ந்து வாசித்த அக்கட்டுரைக்கு அவரை முன்பின் பார்க்காது, திருவான்மியூரிலிருந்து வந்த கிருஷ்ணவேணி அருமையான விளக்கமளித்தது வியப்பளிப்பதாகத் தானிருந்தது. இந்த சிறிநிவாசனுக்கும் கிருஷ்ணவேணிக்கும் முதல்நாள் இரவு மாத்திரம் தொலைபேசி 'சகி'யாக தூது சொன்ன யாருமறியாத ரகசியத்தை பத்மா வெளிப்படுத்திவிட்டாலும், அவர்கள் இருவரும் மண்டபத்தில்தான் ஒருவரை ஒருவர் முதன்முதல் நோக்கி வெளிப்படுத்திய அந்த 'சகிவளம்' அருமை வாய்ந்ததே.

(தொடரும்)

## மாலி

---

பல்கலைக்கழகங்களில் நிலவும் நெருக்கடி

# ஆசிரியர்களும் அவர் எதிர்நோக்கும் பிரச்னைகளும்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்நிலையில் மாணவர் மட்டுமன்று ஆசிரியரும் அனுதாபத்துக்குரியவர். ஆசிரியர் தமது பதவிக் காலத்தின் நடுவிலேயே அந்தத்தைஅடைந்து விட்டதாக உணர்ந்து வாழ்க்கையின் எஞ்சிய கட்டத்தில் யாது செய்வதென்று தெரியாது நிற்பர். பெரும்பாலான பல்கலைக் கழக ஆசிரியர்கள் பல்கலைக் கழகப் பதவியைப் போதனைக்காகவும் ஆய்வுககாவும் பெரு'' ஆர்வத்துடன் தெரிந்து கொண்டவர்கள். அவர்களிற் சிலர் அறிவின் விருத்தியிலும் பரம்பலிலும் ஆர்வம் கொணடு மிகவும் கலகலப்பானவையும் கூடிய வருமானம் தருவனவுமான பதவிகளை ஏற்காது விட்டவர்களாவர். அந்நியப்படுத்தப்பட்டதையும் விரக்தியையும் கூடிய அளவு அனுபவிப்பவர்கள் மதிப்புக் குறைக்கப்பட்டபாட நெறிகஜற் பணிபுரியும் ஆசிரியரேயாவர். மதிப்புக் குறைப்புப் பெரும்பாலும் சமூகத்தில் மதிப்புக் குறைந்தமையின் எதிரொலியாகவன்றி அரசியற் காரணங்களால் ஏற்படுத்தப்பட்டது. சிங்களம், பாளி, சமஸ்கிருதம், பௌத்தக்கல்வி முதலிய பாடங்களும் சமுதாய ரீதியிலே தேவையற்றனவென்று கருதப்பட்டு வேலை வாய்ப்பு அளிக்கும் பாடங்களௌனந் பாடவிதானத்திலே அறிமுகப்படுத்தபட்டபோது ஆசிரியர்கள் அனுபவித்த விரக்திஎனக்கு நினைவுண்டு

ஆசிரியர்களுட் பிரயாசை மிக்கவர்கள் எந்த வகையிலும் சிறந்தவர்களாகவோ புலமை மிக்கவர்களாகவோ இல்லாத போதிலும் காலத்திற்கேற்பத் தங்களைச் சரிப்படுத்திக் கொண்டு நவநாகரிகமான வெகுசனத்தொடர்பு, மொழியியல், போன்ற துறைகளில் மேலோட்டமாக அறிவினைப் பெற்றுக்கொண்டோ அல்லது அவற்றினைப்பற்றிய அறிவேதுமில்லாமலோ ஈடுபடலாயினர். நான் அவர்களைக் குறை கூற வில்லை. அன்று தாங்கள் தொழிலுக்கு ஏற்பட்ட பயமுறுத்தலை அவர்கள் எவ்வளவு பாரதூரமாகக் கருதினார்கள் என்பதையே இது காட்டுகிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் இருவகையினராவர். தங்கள் துறையிற் சிரமமாக கற்றறிந்து, பிந்தியஅபிவிருத்திகளை தெரிந்து வைத்து பகுத்தாய்ந்து கிரகிக்கும்திறமையும் கொண்டவர்களாயிருப்பதனாற் சிறந்த ஆசிரியர்களாக முதல்வகையினர் அமைகின்றனர். ஏற்கனவே இருக்கும் அறிவை மாணவர்களுக்குப் பரப்புவதிலோ, மாணவர்கள் தாமாகவே தேடிக்கொள்ளக்கூடிய தான அறிவைவழங்குவதிலோ ஆர்வமில்லாதவர்களாகவும் அத்தகைய ஒரு பணிக்குத் தாங்கள் உரியவர்கள் எனறு செல்வதையும் காண்கிறார்கள். ஒருபல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர் என்ற முறையிலே தமக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள மாற்றுத்துறையான ஆராய்ச்சியில் அவர்கள் அடைக்கலம் தேடவேண்டியிருப்பினும் அவர்கள் ஆராய்ச்சியில் இயல்பான ஈடுபாடில்லாதவர்களாகவோ அதன் சுழற்சியிற் பிடிபடாதவர்களாகவோ இருக்கலாம். எவ்வாறாயினும் அவர்கள் தமது ஆராய்ச்யோடு செய்யத்தக்கது யாது?

### ஆராய்ச்சி

மானிடவியலைப் பொறுத்தவரையில் ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் அரிதாகக் காணப்படுதலே பாரிய பிரச்சினையாகும். சமீபகாலத்தில் ஆராய்ச்சிச் சஞ்சிகைகள் எண்ணிக்கையிற் அருகிவருவதுடன் கடதாசி, அச்சிடும் செலவுகளின் அதிகரிப்பினாற் காண்பதற்கே

## பேராசிரியர் - எதிரிவீரசரச்சந்திர

கருதாதவர்களாகவும், ஆராய்ச்சியிலும் புதிய அறிவைக் கண்டுபிடிப்பதிலுமே கூடுதலான நாட்டமுடையவர்களாயிருப்போர் இரண்டாம் வகையினராவர். இவர்களில் யார் சிறந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்றோ, ஒரு ஆசிரியரின் கடமை ஆராய்ச்சி செய்வதா அல்லது போதிப்பதா என்பதையோ கூறுவது கடினமாகும். அது எவ்வாறு இருப்பினும் யான் கூறவிரும்புவது யாதெனில், தற்போதைய நெருக்கடியில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் முதலாம் வகையினரே என்பதாகும். அவ்வகையினர் மாணவர்கள் நாளுக்கு நாள் தம்மை விட்டு விலகிச்செல்வதையும் மாணவர்களுக்கும் தமக்கும் இடையிலான விரிசல் கூடிச் அரிதாகிவிட்டன. விஞ்ஞான மருத்துவ ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றிய நேரடி அறிவு எனக்கு இல்லை.

ஆனால் அவர்களிற் சிலர் இந்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக்கு வேண்டிய வசதிகளையோ உகந்த சூழலையோ ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. என்று கூறிக்கொள்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆராய்ச்சிக்கு வேண்டிய உபகரணங்கள் கிடைப்பதற்கரிதாயிருக்கின்றனவா அல்லது ஆராய்ச்சித் திட்டங்கள் செலவு மிக்கனவாயுள்ளனவா என்பதை யானறியேன். விஞ்ஞான ஆசிரியர்கள் பலர் வருமான வாய்ப்புகள் அங்கு அதி

(7-ம் பக்கம் பார்க்க)

---

# மக்கள் கருத்து

## இந்துமாநாட்டு பிரதிநிதிகளை வரவேற்போம்

அகில உலக இந்துமாநாட்டில் கலந்துகொள்ள வருகை தந்துள்ள வெள்நாட்டு பேராளர்கள் வடபகுதிக்கு சுற்றுலா மேற்கொண்டு 26ம் திகதி விஜயம் செய்கிறார்கள் இப் பெருமக்களை வரவேற்கும் வகையில் வடபகுதி சமூக சேவை நிறுவனங்கள் கலை கலாசார அமைப்புகள் மற்றும் வர்த்தக பிரமுகர்கள் எவரும் ஏற்பாடுகளை செய்வதாகக்காணோம். இந்துக்கள் அதிகமாக வாழும் இப் பிரதேசத்துக்குவருகை தரும் இப் பெரியார்களை நமக்கே உரிய கலாசாரப்பண்புகளுடன் வரவேற்பது இந்து மதத்தில் நாம் வைத்திருக்கும் மதிப்பையும் பாசத்தையும் காட்டுவதாக இருக்கும்.

பெரிதாக இல்லாவிடினும் ஆங்காங்கே வரவேற்பு தோரணங்கள் வளைவுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்ய நம்மவர் முன்வர வேண்டும்,

சி. ராம்குமார்
யாழ்ப்பாணம்.

---

# இணுவையூர் சிவகாமவல்லி

''ஆத்தாளே எங்களனைவரையும் பூத்த வண்ணம்
காத்தாளே யின்னுங் கனகவின்ப சுத்தசிவம்
பூத்தாளே செங்கமலம் பூத்தாளே யென்னிதயம்
காத்தாளே தெய்வ சிவகாம சுந்தரியே''

அன்னை சிவகாமவல்லி இணுவையூரின் மாபெரும் சக்தியாக இக் கிராம மக்களின் உயிராக பள்ளிகொண்டு அருள் சுரந்து, அற்புதமாகத் திகழ்கின்றார்.

மன்னன் தக்கனின் மகளாகப் பிறந்து இமயத்தில் பரமனைத் திருமணம் செய்த உமையம்மை மலையரசன் மகளாகப் பிறவியெடுத்து, காஞ்சிநகரில் பங்குனி உத்தரத்தில் விழிநீர் பொழிதர உள்ளம் குழைவுற மெய்தான் அரும்பி விதிர் விதித்து இறைவனை வேண்டி சிவகாமவல்லி எனும் பெயர் பூண்டு திருமணம் பூண்டார் என்பது, நாம் பெறுகின்ற வழிவழி வந்த மரபுச் செய்தி. அத்தோடு மீனாட்சி தேவியாக சுந்தரேசப் பெருமானைஅடைந்தார் என்றும் கொள்ளப்படுகின்றது.

சிவகாமவல்லி எனும் நாமம் பூண்ட அம்மையார் பக்தி, அன்பு, கருணை, இலட்சியம் நோக்கித் தளராது பணியினைச் செய்தல், ஆகிய ஒன்றிணைந்த தன்மைகளின் மதுரவாய் மொழி மங்கையாக விளங்குகின்ற அன்னை; அறிவும், ஞானமும், கல்வியும் தருகின்ற தனங்களையும் அள்ளித் தருபவள்.

பாரும் புனலும் கனலும்
வெங்காலும் படர் விசும்பு
முருபுருகு சுவைவொளி
பூனெலி
ஒன்றுபடச் செருந்தலைவி
சிவகாம சுந்தரி,

மங்கல வாழ்வு விரும்பும் கன்னியரும் காளையரும் வழிபடுகின்றவளாவாள்.

இலங்கைத் திருநாடு திருமூலர் ஞானியின் கூற்றுப்படி சிவசேந்திரம் எனப் பெயர் கொண்டு விளங்கியநாடாகும். ஏறக்குறைய 3000 வருடங்க

## ப. சந்திரசேகரம்

ளுக்கு முன்னரே இந்நாட்டில் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் ஊற்றெடுத்த சிவநெறிச் சக்தி நெறிச் சங்கமம் செறிந்து விளங்கியது. இத்தொன்மை வளம் பெற்ற தொடர் ஆத்மீக நெறி, திருக்கோவலூர், இணுவை மூதூர், மணவில் எனும் பெயர்களைப் பெற்ற இக்கிராமத்தில் வேரூன்றியது. இவ்ஆத்மீகநெறி இங்கு பரந்து கிடந்தது என்பதற்கு அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சி சான்றுகள் காட்டி வலியுறுத்துகின்றது. தமிழ் மரபும் இம்மரபும் ஒன்றோடொன்றுஇணைந்தவை. பாரத நாட்டிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் சிறந்தோங்கிய இத் தத்துவம், நமது நாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முன்னரே ஊற்றெடுத்து சைவ சமய மறுமலர்ச்சி, எழுச்சிக் காலமான 7ஆம், 8ஆம், 9ம் நூற்றாண்டுகளில் புத்தொளி பெற்று இலங்கை மும்முடிச் சோழமண்டலமாகச் சிறப்புற்று விளங்கிய காலத்தில் மலர்ச்சி பெற்றது.

இணுவை நல்லூர் தொன்மையும், சைவமரபினையும் பேணிக்காத்த கிராமமாகும். இணுவில், திருநெல்வேலி, மயிலிட்டி, தெல்லிப்பளை, பச்சிலைப்பள்ளி, புலோலி, தொல்புரம், கோயிலாக்கண்டி, இருபாலை, நெடுந்தீவு, பல்லவராயன்கட்டு முதலிய கிராமங்களில் தமிழ் நாட்டிலிருந்து மக்கள் யாழ்ப்பாணத்து அரசு உதயமான காலவட்டத்தில் குடியேற்றப்பட்டார்கள்.

தமிழ் நாட்டில் திருக்கோவலூர் கிராமத்திலிருந்து சலக கலைகளும் கற்றறிந்த தொல் மரபு நிறைந்த மக்கள் இக் கிராமத்தில் குடியேற்றப்பட்டார்கள். யாழ்ப்பாண நகரில், சைவ நெறியும் தமிழ் நெறியும் செழுமையுற வளர்த்து பரிபாலித்து வந்த காலிங்கராய மன்னன் இணுவிற் கிராமத்தை சிறந்த சற்றரசாகக் கொண்டு இங்கு வாழ்ந்து வந்தார் என்பதற்கு வரலாற்றுச்சான்றுகள் உண்டு. தனது மகளான கமலாயம், திருக்கோவலூரைச் சேர்ந்த திருநகருடையானுக்கு பேரயிரவர் என்பார்க்கு மணம் புரிந்து வைத்ததாகவும் அறியக்கிடக்கின்றது. திருக்கோவலூரெனும் திருநகருடையான் தென் இணுவை எனும் திருநகரறைந்து கன்னலின் மொழிச் சிவகாம சௌந்தரி தினம் பொன்னடி அனுதினம் பூசனை புரிந்து வந்தார். காலிங்கராயர் தனது குல தெய்வமாக சிவகாமசுந்தரியை பிரதிட்டை செய்து நடராசர், பிள்ளையார், வைரவர் பத்திரகாளி ஆகிய தெய்வங்களையும் வைத்துப் பூசித்து வந்தார். அன்னையின் திருவுள்ளத்தால் ஒன்பது நூற்று ஆண்டுகளுக்கூடாக சீரிணுவை நாயகி அருளினால் இக்கோயில் அத்மீகநெறியினையும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் மரபு வழிக் கல்வியையும் பரப்பிவந்துள்ளது.

பரராசசேகரப்பிள்ளையார் செயராசசேகரப் பிள்ளையார்: கருணாகரப்பிள்ளையார், அருணகிரிநாதர் கந்தசுவாமி இணுவில் நொச்சியம்பதி கந்தசுவாமி கோயில் காரைநகர் சிவன் கோவில் எல்லாம் இந்த ஒன்பது நூற்றாண்டு காலத்தினுள் சைவநெறி சமரச நெறி என்பதற்கிணங்க இறைவனின் பல அம்சங்களைப் பிரதிபலிப்பது போல சிறப்புற்று வளர்ந்து வந்தன.

அன்னை சிவகாமி எல்லோர்க்கும்! அன்னை எனும் தத்துவத்தை விளம்பி பாரினிலே பட்டொளி வீசிம்பரப்புகின்றார்.

இலங்கையின் போர்த்துக்கேயர் ஆட்சிகாலத்தில் கூட இக்கோயில் நிலை தள்ம்பாது நிலைத்து நின்றது ஒல்லாந்தர்

(7ம் பக்கம் பார்க்க)

போக்லண்ட் தீவுகள் விவகாரம்:

# எந்நேரமும் போர் மூளும் அபாயம்!

## ராஜதந்திர முயற்சியில் முட்டுக்கட்டை

வாஷிங்டன், ஏப். 24

போக்லண்ட் நெருக்கடியைத் தீர்க்க எடுக்கப்பட்ட ராஜதந்திர முயறசிகளில் முட்டுக்கட்டையேற்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. ஹிம் வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹேக்குடன் சமரசத் தீர்வுகாண பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்.

பிரிட்டனுக்கும், ஆர்ஜென்டீனுவுக்குமிடையில் கருத்து வேறுபாடு அதிகம் உள்ளதால் இணக்கம் அசாத்தியமாக உள்ளதாக ராஜாங்க அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேநேரத்தில் பிரிட்டிஷ் போர்க் கப்பல்கள் யுத்த வலயத்தை அண்மித்துவிட்டன. எந்தநேரத்திலும் போர் மூளலாம் என அஞ்சப்படுகின்றது. பிரதமர் திருமதி மார்க்கிரட் தாட்சர் போர்க்கப்பலிலுள்ள தளபதியுடன் அடிக்கடி தொடர்பு கொண்டவண்ணம் இருக்கின்றார்.

ஆர்ஜென்டீனு இஸ்ரேலிடம் பீரங்கி வெடி மருந்துகளும், பிரேசிலிடம் இராணுவ உதவியும் கோரியுள்ளது. ஆர்ஜென்டீனு வானெலி "ஆர்ஜென்டீனு மக்களுக்கு ஆபத்து எதிர்நோக்குகிறது" என அறிவித்த வண்ணம் இருக்கிறது.

ஆர்ஜென்டீனுவுக்கு எதிராக படைகளை உபயோகிப்பது சம்பந்தமாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தாட்சர் மந்திரிசபையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. [கு]

மேதின ஊர்வலம் தடை:

# அனுமதி வழங்குமாறு ஜனதிபதிக்கு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

மேதின ஊர்வலத்துக்கு பொலிஸ் அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து, ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில்; யாழ். மாநகர எல்லைக்குள் மேதின ஊர்வலம் நடத்த கட்சிக்கு அனுமதி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

"யாழ். மாநகர எல்லைக்குள் மேதினத்தன்று ஊர்வலம் நடத்த பொலிஸ் அனுமதி கோரி ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி எமது கட்சி விண்ணப்பித்திருந்தது. இம்மாதம் 15ம் திகதி யாழ். பொலிசாரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடிதத்தில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேதின ஊர்வலத்துக்கு தடை விதிக்கப்பட்டதன்மூலம் வட பகுதித் தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்படுவதாகவே உணருகின்றேம். இது சம்பந்தமாக தலையிட்டு, மேதின ஊர்வலத்தை நடத்த எமக்கு பொலிஸ் அனுமதி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும்" என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) செயலாளர் திரு. கே. ஏ. சுப்பிரமணியம் ஜனதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"போக்லண்ட் தீவு மீதான

# எமது ஆதிபத்திய உரிமையை இழக்க முடியாது"

## ஆர்ஜென்டீனு அதிபர் 'போர்க்குரல்'

புவனஸ் அயர்ஸ் ஏப். 24

"போக்லண்ட் தீவுகள்மீது ஆர்ஜென்டீனு கொண்டுள்ள ஆதிபத்திய உரிமையை அது இழக்கமுடியாது. போக்லண்ட் தீவுகளுக்கு விஜயம் செய்ய நான் தீர்மானித்துள்ளேன். அங்கு எமது அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசங்களை நான் பார்வையிடுவேன்."

இவ்வாறு ஆர்ஜென்டீனு அதிபர் ஜெனரல் கல்ஹாரி தொலைக்காட்சியொன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது:

"போக்லண்ட் தீவுகளில் விமான, கடல் முற்றுகைகளை மேற்கொள்ளும்படி எமது படைகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. போக்லண்ட்தீவுகள் பிரச்னைக்கு ராஜதந்திர மட்டத்தில் தீர்வுகாண்பதையே நான் விரும்புகிறேன்" என்றார்.

இதேவேளை பிரிட்டிஷ் கடற்படை போக்லண்ட்தீவுகளை சென்றடைய இன்னும் ஒரு சில நாட்கள் செல்லுமெனத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

# சிறிமா மேமாதம் வவனியா விஜயம்

[வவனியா]

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் பிரசாரச் கூட்டம், இன்று நெடுங்கேணி நயினமடுவில் நடைபெறவுள்ளது. இக் கூட்டம் சிறிமா பிரிவினல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரு. எஸ்! தப்பிநாயகம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் வவனியா – முல்லைத்தீவு மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. எம். நடராசா சுதந்திரக்கட்சி பிரமுகர் திரு. எஸ். ஏ. வரதராஜா உட்பட பலர் உரையாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மே மாத நடுப்பகுதியில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வவனியாவில் தேர்தல் பிரசாரத்தில் பங்குபற்றவுள்ளார். [கு]

அல்ஜீரியாவில் கூட்டு அடிப்படையில்

# சுற்றுலா ஹோட்டல்களை இந்தியா நிர்மாணிக்கும்

புதுடில்லி, ஏப். 24

அல்ஜீரியாவில் இந்தியா சுற்றுலாக் ஹோட்டல்களைக் கட்டி அல்ஜீரியாவும் இந்தியாவும் கூட்டாக நிர்வகிகக உள்ளன என இந்திய சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

அல்ஜீரியா ஜனதிபதி திரு. பெஞ்சமினும் சில அமைச்சர்களும் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இங்கு வந்துள்ளனர். அல்ஜீரிய அமைச்சர்கள் குழுவுடன இந்திய அமைச்சர்கள் நடாத்திய பேச்சுவார்த்தையிலே அல்ஜீரியாவில் ஹோட்டல்கள் நிர்மாணிப்பதில் இணக்கம் காணப்பட்டுள்ளது. [கு]

# அல்ஜீரியஅதிபர் இந்தியா விஜயம்

புதுடில்லி, ஏப். 24

அல்ஜீரியா அதிபர் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார்.

இவரை விமான நிலையத்தில் பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி, ஜனதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி ஆகியோர் வரவேற்றனர். (வெ)

# சிமெந்து: போலிப்பாவனையாளர் குட்டு அம்பலம்!

(யாழ்ப்பாணம்]

சிமெந்து அனுமதிப்பத்திரத்தில் பலவிதமான மோசடிகள் நடைபெறுவதாக யாழ். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போலிப்பாவனையாளர்கள் சிமெந்து அனுமதிப்பத்திரங்களைப்பெற்று அதை வியாபாரிகளுக்கு விற்பதாகவும் இதனல் உண்மையான பாவனையாளர் பெரிதும் பாதிப்புக்குள்ளாவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

கடந்த 21-ம் திகதி இரகசியத்தகவல் ஒன்றையடுத்து யாழ் விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர்களான திருவாளர்கள் நா. அருளானந்தம் செ. நவரத்தினம் ஆகியோர் ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்க பண்டசாலைக்குச் சென்ற போது அங்கு இரு வண்டில்களில் சிமெந்து ஏற்றப்பட்டிருந்ததாம். அந்த வண்டிலைப் பின் தொடர்ந்த போது அது சற்றுத்தூரம் சென்று ஒரு வளவினுள்வைத்து ஒரு டிராக்டரில் அந்த சிமெந்து ஏற்றப்பட்டுக் கொண்டிருந்ததாம், விலைக்கட்டுப்பாட்டுப்பரிசோதகர்கள் அவர்களை விசாரித்த போது அவர்கள் மீது சந்தேகம் கொண்டு டிராக்டரையும் சிமெந்தையும் கைப்பற்றி யாழ். அரசாங்க அதிபரிடம ஒப்படைத்தனர் டிராக்டரை செல்ல அனுமதித்த அரசாங்க அதிபர் சிமெந்து பாக்குகளை தடுத்து வைத்துள்ளார்.

இதேநேரத்தில் யாழ். மானிப்பாய் வீதியிலுள்ள ஒரு வியாபாரி 52 சிமெந்து பாக்குகளை வைத்திருந்தும் அவற்றை விற்கமறுத்ததினல் சிமெந்து பாக்குகளை யாழ். விலைக்கட்டுப்பாட்டுப்பாட்டுப்பரிசோதகர்குழு அவற்றைக் கைப்பற்றி யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்க பண்டசாலையில் ஒப்படைத்தனர்.

# விவசாயிகள் சங்கத் தலைவர் நாராயணசாமிதிடீர்சுகவீனம்

சென்னை, ஏப். 24

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி வயிற்றேட்டப காரணமாக சென்னை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தடுப்புக்காவலிலிருக்கும் போது நோய்வாய்ப்பட்ட திரு. நாராயணசாமியைச் சென்னை ஆஸ்பத்திரியின் தீவிர கண்காணிப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றது.

விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபட்ட திரு. நாராயணசாமி உட்பட 1500 நபர் வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

"இந்திரா காங்கிரஸ் தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வந்தால் விவசாயக்கிளர்ச்சிககுக்காரணமாகவிருக்கும் விவசாயக் கூட்டுறவுக் கடனை இரத்துச் செய்யும்" என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்ராமன் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கையில் தமிழ்நாடு விவசாய அமைச்சர் திரு. காளிமுத்து "இந்திரா காங்கிரசினர் விவசாயக் கடனைப் பற்றி தேர்தல்களில் பேசியவர்கள் இன்று அக் கடனை இரத்துச்செய்யவேண்டுமென்கின்றனர். அவர்கள் இவற்றையெல்லாம் மத்திய அரசிடம் சொல்லல் வேண்டும்" என்றார். [கு]

# 46 லட்சம் டொலர் வைரம்

ஜெனீவா ஏப். 24

தென் ஆபிரிக்காவில் கண்டெடுக்கப்பட்ட 324 கரட் வைரம் 46 லட்சம் டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

இதுபட்டை தீட்டப்பட்ட 5-வது திறமான வைரமாகக் கணிக்கப்படுகின்றது.

இரண்டு திறமான வைரங்கள் பிரிட்டிஷ் மகாராணியின் முடியில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (கு]

மலேசியாவில்

# தேசியக்கட்சி முன்னணியில்

கோலாலம்பூர் ஏப். 24

மலேசிய பொதுத்தேர்தலில் ஆளும் தேசியகட்சி முன்னணி வகிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. [கு]

கன்யாகுமரி:

# கமிட்டி விசாரணை ஆரம்பம்

சென்னை ஏப். 24

கன்யாகுமரி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மதக்கலவரத்தை விசாரிக்க தமிழ்நாடு அரசினல் நியமிக்கப்பட்ட நீதிபதி வேணுகோபால் ஆணைக்குழு கலவரத்தால் பாதிப்படைந்த பகுதிகளை பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களையும் பதிவுசெய்துள்ளது. (கு]

# பிரி. அமைச்சர் வாஷிங்டன் பயணம்

லண்டன், ஏப். 24

போக்லண்ட் தீவுகள் நெருக்கடிக்கு சமரசத்தீர்வொன்றை காணுவதற்காக புதிய யோசனைகளுடன் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் இன்றுவாஷிங்டன் பயணமானர்.

அதேவேளை இன்றுநள்ளிரவு முதல் யுத்தத்திற்கு தயாராகவிருக்குமாறு பிரிட்டிஷ் கடற்படைக்கு பணிக்கப்பட்டுள்ளது. (வெ)

# கம்பியூட்டரில் தவறு

## மதுரைபல்கலைக்கழக மாணவர் புகார்

மதுரை, ஏப். 24

கம்பியூட்டரில் தவறு ஏற்பட்டதால் பி. காம் பட்டப் படிப்புப் பரீட்சைப் பெறுபேறுகளில் குளறுபடியென மதுரைப் பலகலைக்கழக மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் புகாரை மறுத்து கம்பியூட்டரில் எந்த வித தவறுமில்லை என மதுரைப் பல்கலைக்கழகம் தெரிவிக்கின்றது.

மாணவர்களின் புகார் குறித்து தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் மதுரைப் பல்கலைக்கழகத்திடம் விளக்கம் கோரியுள்ளார். [கு]

# ஹிம்சத் சமிக்கை கொடுக்கிறது

பங்களூர் ஏப். 24

'ஹிம்சத்' செயற்கைக் கோள் நல்ல சமிக்கை அனுப்புவதாக பங்களூர் விண்வெளி கட்டுப்பாட்டு நிலையம் தெரிவிக்கின்றது.

இந்திய செயற்கைக்கோள் ஹிம்சத்தின் அன்ரெனு நல்ல நிலையில் உள்ளதாகவும் ஹிம்சத்தின் பயணம் வெற்றியளிக்கும் என ஹட்சனில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. [கு)

நாளை யாழ். நகரில்

# ஆங்கில நடிகரின் தனி நடிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரபல ஆங்கில நடிகர் பிரெயின் டி பார்ன்ஸ் நாளை திங்கட்கிழமை தமது தனிநடிப்பு நிகழ்ச்சியை யாழ். நகரில் நிகழ்த்துகிறர். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் மாலை 6-30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்ச்சிக்குப் பேராசிரியர் கைலாசபதி தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

### மாலினி மரண விசாரணை:

# 'சாவகச்சேரிக்குவந்தபோதுமாலினிக்கு மூச்சு இருப்பதுபோல் தெரியவில்லை''

## முகாமையாளர் சிவகுமார் சாட்சியம்

- கே. யோகநாதன் -
(யாழ்ப்பாணம்)

''மாலினியை காரில்ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம்பெரிய ஆஸ்பத்திரிக்கு வேகமாக வந்தேன். கொடிகாமத்தில் காரில் பெரும் சத்தம் கேட்டது. கார் இயங்க மறுத்துவிட்டது. அங்குவந்த வாடகைக்கார் சாரதி ஒருவரிடம், மாலினி சுகவீன முற்றிருப்பதால், அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக உதவுமாறு கேட்டேன். அவர் மாலினியை பார்த்துவிட்டு மறுத்துவிட்டார். வேறு கார் ஒழுங்கு செய்வதாக கூறினர். அப்போது காரைச்சுற்றி சனங்கள் கூடிவிட்டனர்''

மாலினி மரணவிசாரணையில் சாட்சியமளித்த பிராந்திய விற்பனை முகாமையாளர் செல்லத்துரை சிவகுமார் (31வயது) மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன்

## விசாரணை அடுத்த மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைப்பு

முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

ஆனையிறவு உப்பு கூட்டுத்தாபன விடுதியில், கூட்டுத்தாபன கணக்காளர் கே. மகேந்திரனின் மனைவி மாலினி மர்மமான முறையில் மரணமானது தொடர்பான மரண விசாரணை 5வது தினமாக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சந்தேக நபரான செ. சிவகுமார் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். தவராசா, எஸ். சிவபாதசுந்தரம், கே. கனகசபாபதி ஆகியோர்ஆஜரானர்கள். இறந்த மாலினியின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி ஜிப் மி இராசரத்தினம் ஆஜரானர்.

### சிவகுமார் சாட்சியம்

சம்பவம் நடந்த போது மாலினியுடன் அதே விடுதியில் தங்கியிருந்த பிராந்திய முகாமையாளர் செ. சிவகுமார் ஆங்கிலத்தில் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''முதன் முதலாக மாலினி நஞ்சு அருந்தியதாக சொன்னவுடன், அறையில் படுத்திருந்த அவரது பிள்ளையை படுக்கை விரிப்புடன் தூக்கிக்கொண்டு ஹோலுக்கு வந்தேன். எனக்கு தெரிந்த வரையில் அந்த விடுதியில் பாய் இருக்கவில்லை. வழக்கமாக தடித்த படுக்கை விரிப்பை நாலாக மடித்து பிள்ளையை கிடத்துவார்கள்.

### மாற்றம்பெற்று வரும்படி....

நான் கொழும்புக்கு மாற்றலாகிச் சென்ற பின்னர் அங்கு வந்திருந்தேன். யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்று வரும்படி மாலினி அடிக்கடி வலியுறுத்தினர். பிராந்திய முகாமையாளராக வர முடியும் என்று நான் சொன்னேன். இந்தத் தடவையும், மாலினி என்னை யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்று வரும்படி வற்புறுத்தினர். நான் வராமல் விட்டுவிடுவேன் என்று மாலினி மனதில் யூகித்திருக்கிறர்.

### நகைகள் அடைவில்

மாலினியின் நகைகள் அடைவுவைக்கப்பட்டிருந்தன. சில நகைகள் விற்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக மகேந்திரனுக்கும் சில நேரங்கள் சச்சரவு ஏற்படுவதுண்டு.

நீதவான்: எந்தச் சந்தர்ப்பத்திலாவது மாலினியிடம் ஏன் இப்படி செய்தீர் என்று கேட்டீரா?—இறந்தவர் தான் மருந்து குடித்துவிட்டதாக கூறியபடியால், நான் எக் காரணத்திற்காக குடித்தீர் என்று கேட்கவில்லை. ஆனல் சைகையினல் நீர் என்னைக் கஷ்டப் படுத்திவிட்டீர் என்றேன்.

### அருகில் இருந்தேன்

மாலினியின் கையையும், காலையும் பிடித்துக் கொண்டு அருகில் இருந்தேன். நான் கால்சட்டை மாற்றப் போன நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் மாலினியுடன்தான்இருந்தேன். நான் அருகில் இருந்த போது ஒருமுறை மாலினி தனது மகளின் பெயரைச் சொல்லி இரு தடவை கூப்பிட்டார்.

### யாழ்ப்பாணம் புறப்பட்டோம்

மாலினியைப் பின் டாக்டரிடம் கொண்டு சென்ருேம். கிளிநொச்சி டாக்டர் தன்னுல் ஒன்றும் செய்ய முடியாதென்று யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகச் சொன்னர். பின்பு நாங்கள் மாலினியை காரில் ஏற்றி யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டோம்.

ஆனையிறவுக்கு வந்த போது எம்முடன் வந்த ஜோசப், தான் மறுநாள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று கூறி காரிலிருந்து இறங்கிவிட்டார். வேறு ஒருவரை ஏற்றிக் கொண்டு சென்ருேம். நாங்கள் சுற்றுலா விடுதியில் நிற்கவில்லை. ஆஸ்பத்திரிக்கு புறப்படும்போது வீட்டை பூட்டவில்லை. அந்நேரத்தில் அங்காடி என்பவர் பிள்ளையைத் தன்னுடன் வைத்திருப்பதாக கூறினர்.

### டாக்டர் இருக்கிருரா?

''பளையை அடைந்ததும், காரை ஆஸ்பத்திரிக்கு முன்னுல் நிறுத்திவிட்டு இறங்கிச் சென்றேன். டாக்டர் இருக்கிருரா என்று கெட்டேன் இல்லை என்று சொன்னுர்கள். அதன் பின் யாழ்ப்பாணம் புறப்பட்டோம். கொடிகாமத்திற்கு வந்தபோது காரில் பெரிய சத்தம் கேட்டது. நான் இறங்கிக் காரைத்திருத்தினேன். வாடகைக்காரர் ஒருவரை உதவும்படி கூறினேன். அவர் மாலினியைப்பார்த்துவிட்டு மறுத்துவிட்டார். வேறு கார் ஒழுங்கு செய்வதாகப் போய்விட்டார். சனங்கள் கூடிவிட்டார்கள். கொஞ்ச நேரத்தால் காரைத் திருத்திப் புறப்பட்டோம்.

### கார் பழுதடைந்தது

''சாவகச்சேரிக்கு அப்பால் சென்றதும் கார் முற்ருகப்பழுதடைந்துவிட்டது. முன்பக்கமாக கார் ஒன்று வந்தது. அக் காரை மறித்து நோயாளியை ஆஸ்பத்திரிக்குக்கொண்டு செல்லுமாறு கேட்டேன் அவர் மறுத்துவிட்டார். நான் அந்த நேரம் அழுதுவிட்டேன், நோயாளியை ஏற்றப்பயப்பட்டால் எனது காருடன் கயிற்றில் கட்டி இழுத்துச் செல்லுமாறு கெஞ்சினேன். அவர் மறுத்துவிட்டார் அப்போது யாழ்ப்பாணம் நோக்கி வேறு ஒரு கார் வந்தது அவர்களிடம் உதவி கேட்டேன். அவர்கள் மாலினியை கொண்டுசெல்ல சம்மதித்தார்கள். அக்காரில் யாழ். பெரிய ஆஸ்பத்திரிக்கு மாலினியை கொண்டு வந்தேன்.



மர்மமான முறையில் மரணமான மாலினி

நீதவான்: உமது காருக்கு என்னநடந்தது?— ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்தது பின்னர் என் காரை கருச்சில் சேர்ப்பித்தேன். காரைகட்டி இழுத்து யாழ்ப்பாணம் கொண்டு வந்தேன்.

''நாங்கள் ஆஸ்பத்திரிக்கு 15ம் திகதி காலை8–30 மணியளவில் வந்து சேர்ந்தோம். கிளிநொச்சியிலிருந்து காரைவேகமாகச்செலுத்தினேன். பளைக்கு காலை 6–40 மணிக்குவந்தோம். சாவகச்சேரிக்கு 7–30 மணிக்கு வந்தோம்.

''சாவகச்சேரிக்கு வந்த போது மாலினிக்கு மூச்சு இருப்பதுபோல் தெரியவில்லை. அதனுல் நேராக ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்தேன். சுண்டிக்குளியில் அவர் தாய் வீடு இருந்தபோதும் வீட்டிற்குச் செல்லாமல் நேராக ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்தேன்.

### யார் என்று கேட்டார்கள்

''ஆஸ்பத்திரியில் காரிலிருந்து மாலினியை இறக்கினேம், ஒரு தள்ளு கதிரையில் மாலினியை இருத்தி உள்ளே கொண்டு போனேம். அங்கு நான் தான் மாலினியை கொண்டுவந்ததாககூறினேன். என்னை யார் என்று ஆஸ்பத்திரியில் கேட்டார்கள் நான் ஒரு சிநேகிதன் என்று சொன்னேன். வீட்டுக்காரர் இல்லையா என்று கேட்டார்கள். போய் அவர்களை கூட்டிவரும்படி சொன்னுர்கள். நான் போய் தாயாருக்கு அறிவித்தேன். பின் தாயாரும் நானும் சென்று மாமனுருக்கு சொன்னேம். மாமனுருக்கு ''எல்லாம் முடிந்து விட்டது'' என்று கூறினேன். கொழும்பிலுள்ள எனது வீட்டிற்கு அறிவித்தல் கொடுத்தேன். மகேந்திரனுக்கு அறிவிக்குமாறு தொலைபேசியில், என் வீட்டிற்கு அறிவித்தேன். தொலைபேசியில் என் தந்தையுடன் பேசினேன். மாலினிக்கு வருத்தம் கடுமை உடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு வரும்படி மகேந்திரனுக்கு கூறுமாறு சொன்னேன்.

### மாலினிக்கு என்ன நடந்தது

''மகேந்திரன் யாழ்ப்பாணம் வந்ததும் மாலினிக்கு என்ன நடந்தது? என்று கேட்டார். நான் நஞ்சருந்தி விட்டார் என்று கூறினேன். 'ஏன் ஏன்' என்று திருப்பி திருப்பி கேட்டார். மாலினி மது அருந்தினரென்று மகேந்திரனுக்கு கூறினேன். இதனை வேறு ஒருவருக்கும் கூறவில்லை என்றேன். பொலிசாருக்கும் கூறவில்லை என்றேன். மகேந்திரன் ''நல்லது அப்படியே இருக்கட்டும்'' என்ருர்.

### ஏன் நஞ்சுஅருந்தினர்?

''ஏன் மாலினி நஞ்சு அருந்தினர்? என்று மகேந்திரன் கேட்டார். ''அன்று உமக்கும் மாலினிக்கும் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதா?'' என்று கேட்டேன். அப்போது அவர் தனதுபயணத்தை ரத்து செய்யும்படி கதைத்ததுதான் அந்த வாக்குவாதம் என்ருர்.

''மறு நாள் நான் மகேந்திரனுடன் ஆனையிறவு விடுதிக்குச் சென்றேன். நான் எனது காரியாலய ஆவனங்கள் சிலவற்றை எடுத்தேன். அத்துடன் அங்கிருந்த எனது சில உடுப்புகளையும் எடுத்தேன். மகேந்திரன் வைத்திருந்த திறப்பினுல் வீட்டைத் திறந்து

(5ம் பக்கம் பார்க்க)

Glaxo

வடமாகாண வாடிக்கையாளரின்
வசதி கருதி
''கிளாக்ஸோ''
உற்பத்திப் பொருட்களின் விநியோகஸ்தர்களாக
யாழ்ப்பாணஐக்கிய வியாபாரச்
சங்கம் லிமிட்.
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537
ஸ்தாபனத்தார்
நியமிக்கப்பட்டுள்ளனரென்பதை
மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேம்
கிளாக்ஸோ சிலோன் லிமிட்டெட்
த. பெ. எண் 1653 - கொழும்பு.

## சாவகச்சேரிக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே சென்றுர். நானும் அவருடன் சென்றேன்.

15ம் திகதி இரவுநான் மசேந்திரன் விடுதிக்குச் சென்றபோது அங்கிருந்த ஒருவரும் பது அருந்தவில்லை.

நீதவான்: 15ம் திகதி பொலிசார் முதலில் விடுதியை பரிசோதனை செய்தபோது சாமி அறையில் சாராய போத்தல் இருக்கவில்லை என்று கூறுகிறுர்கள். ஆனல் 21ம் திகதி விடுதியைபார்வையிட நாம்சென்றபோது சாமி அறையில் அரைப் போத்தல் சாராயம் இருந்தது இதற்கு என்ன கூறுகிறீர்?– பொலிசார் சரியாகப்பார்த்தார்களோ என்று எனக்குத் தெரியாது. நான் அவர்களுடன் செல்லவில்லை.

நீத: மகேந்திரன் அந்த சாராயப்போத்தலைத்தான் நீர் சேட்டினுல் துடைத்து விட்டு அங்கு வைத்ததாக சொல்லியிருக்கிறுர்?– அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

நீத: ஆனையிறவு புகையிரத நிலையத்தில் மாலினியை பார்த்து சோர்ந்த நிலையில் இருப்பதாக கூறியிருக்கிறீர்?– அவருக்கும் கணவருக்கும் சச்சரவு ஏற்பட்டதால் அது தெரிந்தது. மாலினி அப்போது தனக்கு சுகமில்லாமல் இருப்பதாக பதிலளித்தார். தன் கணவன் பயணம் செல்லுமுன் அவருடன் சந்தோஷமாக இருந்து அவரை திருப்திப்படுத்த வேண்டியிருந்தது. என்றும் கூறினுர்.

''நான் மாமனுருடன் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது அங்கு விசாரித்துக் கொண்டிருந்தார்கள். மாலினியை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்த கார்க்காரர் என்னை சுட்டிக்காட்டினுர்கள். கரைச்சல் தந்தகிற்கு மன்னிக்குமாறு சொன்னேன். ஏற்கனவே பொலிசாருக்கு கூறிவிட்டே சென்றதாகவும், பயப்பட வேண்டாமென்றும் சொன்னுர்.

### வெள்ளை'லைட்' எரிந்தது

மாலினி அறையில் மணிக்கூட்டுக்கு அலாரம் வைத்தது நான் தான். ஆனல் அது அடித்தது எனக்கு கேட்கவில்லை. மாலினி அறைக்குள் ஒரு லைட் எரிந்தது.

நீதவான்: என்ன லைட்? ஒருலைட் எரிந்தது நான் எல்லா லைட்டுசளையும் அணைத்துவிட்டு மாலினி அறை லைட்டையும் அணைத்தேன்.

மாலினி அறைக்குள் 2 லைட் இருந்தது ஒன்று வெள்ளை லையிட் மற்றது மங்கல் பச்சை லைட் அன்று முழுவதும் வெள்ளை லைட்தான் எரிந்தது. நான் அதனை அணைத்தேன் பச்சைலைட்பாவிக்கபடவில்லை.

விசாரணை அடுத்த மாதம் 4-ம் தேதிவரை ஒத்திபோடப்பட்டது. (க)

# "அம்மாவின் அறையில் வெளிச்சம் எரிந்தது"

## பியோன் சகாயராசா சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''காருக்குப் பெற்ரேல் வாங்க இரவு 2 மணிக்கு மகேந்திரன் ஐயா வீட்டிற்குப் போனேன். ''அம்மா'' என்று கூப்பிட்டேன். ஒருதரும் எழும்பவில்லை. பின்பு 'பெல்லை' அடித்தேன். அம்மா 'ஆர்' என்று கேட்டார். நான் சகாயராசா என்றதும் 'ஆ' என்று கூறிவிட்டுவந்தார். அந்தநேரத்தில் அம்மாவின் படுக்கை அறையில் பச்சைலைட் எரிந்து கொண்டிருந்தது.

மாலினி மரண விசாரணையில் சாட்சியமளித்த உப்புக் கூட்டுத்தாபன பியோன் ஆண்டி சகாயராசா மேற்கண்டவாறு கூறினுர்.

சகாயராசா மேலும் கூறியதாவது; ''வெளி விருந்தையில் வெளிச்சம் எரிந்துகொண்டிருந்தது. மாலினி அம்பா உட்கதவைத் திறந்தார். அருகில் சென்று கதைத்தேன் அந்நேரம் அம்மா இரவு உடை அணிந்திருந்தார். ஹோல்லைட் எரியவில்லை.

'படம் நல்லதா என்று கேட்டார் ஆம் நல்ல படம் என்றேன். சனங்கள் வந்திருந்தார்களா என்று கேட்டார் பரவாயில்லை என்றேன். அப்போது சிவகுமார் மற்றப்பக்க அறையிலிருந்து வந்தார். எப்படிப் படம் என்று கேட்டார். பரவாயில்லை என்றேன். பெற்ரேல் தேவை என்றேன். அவர் தனது காரிலிருந்து பெற்ரேல் எடுத்துத் தந்தார். சிவகுமார் வந்தபோது மாலினி அம்மா விலத்தி நின்ருர். நான் திரும்பி வந்தபோது மாலினி அம்மா வாசலில் இல்லை.

நீதவான்: 2 மணி என்று எப்படித்தெரியும்? – கடிகாரம் கட்டியிருந்தேன்.

நீதவான்: எதற்காக அப்போ நேரம் பார்த்தீர்? – தொலைக்காட்சிப்படம் முடிந்ததால்.

நீதவான்: என்ன படம் காட்டப்பட்டது? அன்னை ஓர் ஆலயம்.

நீதவான்: அன்னை ஓர் ஆலயமா? நெஞ்சில் ஓர் ஆலயமா? – ''அன்னை ஓர் ஆலயம்'' தான். அத்துடன் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியனும் காட்டினுேம் இடைக்கிடை வேறு துண்டுப்படமும் காண்பித்தோம்.

ஆண்டி சகாயராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது மாலினி அம்மாவையும் மகேந்திரனையும் ஒன்றரை வருடமாக எனக்குத் தெரியும்.

14-ம் தேதி காலை புதுவருடதினத்தன்று வீட்டிற்கு வருமாறு மாலினி அம்மா கூறியிருந்தார். நான் புதுவருடத்தினத்தன்று அங்கு சென்றேன் வேறு ஒரு சிற்றூழியரும் வந்திருந்தார். மாலினி அம்மா எனக்கு சிற்றுண்டி தேநீர் தந்தா காலை 10 மணிக்கு சென்று 12 மணிவரை அங்கு இருந்தேன் நான் அவர்கள் வீட்டிற்கு போவது வழக்கமுண்டு.

பிற்பகல் 2-45 மணிக்கு கந்தசாமி கோவிலுக்கு மகேந்திரனும் மாலினி அம்மாவும் பிள்ளையும் சிவகுமாரும் வந்தார்கள். என்ன நிற்கிறீர்? என்று கேட்டார்கள் தொலைக்காட்சி பெட்டி எடுத்துக் கொண்டு செல்வதற்கு கார் பிடிக்கவந்ததாக சொன்னேன் சிவகுமார் தான் தனதுகாரை தருவதாக கூறினுர். தொலைக்காட்சி பெட்டியை மகேந்திரன் வீட்டிற்கு கொண்டுவந்தேன் அங்கு தொலைக்காட்சி பெட்டியை இறக்கினுேம்.

பின் இரவு 2 மணிக்கு மீண்டும் அங்கு போய், பெற்ரேல் பெற்றுச் சென்றேன். (க)

தொலைக்காட்சிப் பெட்டிகள் விசேட கழிவு

பிளாப்புங் - Blaupunkt

ஜேர்மன்—கலர் T.V. (பலவித அளவுகளில்)

சம்சுங் - Samsung

கறுப்பு—வெள்ளை T.V.

12 அங்குல, 14 அங்குல அளவுகளில்

மின்சாரத்திலும் 12V. பற்றறியிலும் இயங்கக்கூடிய

(பற்றறி இணைப்பு சாதனங்கள் இலவசமாக வழங்கப்படும்)

திருச்செல்வம் அன் கம்பெனி

510, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (போன்: 561)

2945

## 'எல்லாரும்ஒன்றுபட்டுவாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது"

(அரியாலை)

''தமிழ் மக்களிடையே கடந்த பல நூற்றுண்டுகளாக ஏற்பட்ட மூடநம்பிக்கையினுல் ஒரு பகுதி மக்கள் ஒடுக்கப்பட்டு, உரிமை மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்தார்கள். காலக்கிரமத்தில் அவர்கள் பொருளாதாரம் கல்வி ஆகியவற்றிலே வளர்ச்சி பெற்று அவர்களும் மற்றவர்களுடன் ஒன்றுபட்டு வாழக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டு வருகின்றன''.

இவ்வாறு கோப்பாய்தெற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. கே. கனகலிங்கம் கோப்பாய் சூரியோதய சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டிக்கு அதிதியாகக கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சனசமூக நிலைய செயலாளர் சமூகரத்தினம் திரு. எம்.கே. இளையப்புவின் வரவேற்புரையுடன் ஆரம்பித்த விழாவில் திரு. கனகலிங்கம் தொடர்ந்து பேசுகையில் விளையாட்டுப் போட்டிகள் மனிதனைப் பூரணமடையச் செய்வதுடன் சமூக ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்றும் இப்பகுதி வாலிபர்கள் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பாராது பல துறைகளிலும் தனது கவனத்தைச் செலுத்தி முன்னேற்றமடைய முயற்சி செய்ய வேண்டும் என்றும் முழுவதற்கும் அரசாங்கத்தை நம்பி இருந்தால் நாம் எதிர்காலத்தில் ஏமாற்றமடைய வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் இச்சமூக நிலையத்தின் ஆதரவில் முதியோர் கல்வித்திட்டமொன்றை ஆரம்பித்து நடத்தினுல் கிராமோதய சபையின் மூலம் அதற்கு ஆதரவு அளிக்சமுடியும் என்றும்குறிப்பிட்டார்.

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் கோப்பாய்க்கிளைத்தலைவர் திரு. இ. கோபாலசிங்கம் பேசுகையில் விளையாட்டுப் போட்டிகள் கிராம மக்களிடையே ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துகிறதென்று குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. பொன் பேரின்பநாதன் பேசுகையில் விளையாட்டுப் போட்டிகள் நல்ல பண்புகள் வளர ஏதுவாக அமைவதுடன் தோல்வியையும் வெற்றியையும் சமனுக மதிக்கும் மன இயல்பையும் உருவாக்குகின்றது என்று குறிப்பிட்டார்.

போட்டிகளில் வள்ளுவர் இல்லம் சம்பியன் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. பாரதி இல்லம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை திரு. கனகலிங்கம் வழங்கினுர். நிலைய உப செயலாளர் திரு. சூ. யா. இம்மனுவேல் திரு. சி. பத்மநாதன் ஆகியோரும் பேசினர். —— (அ)

## பாராட்டுபசாரம்

(அரியாலை)

வர்த்தகப்பிரமுகரும் சமூக சேவையாளருமான திரு. வே. மார்க்கண்டு சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் தென்மராட்சிக்கிளையின் சார்பில் வரவேற்புபசாரம் அளிக்கப்படவுள்ளது. அடுத்த மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சியில் நடைபெறவிருக்கும் இவ்வைபவம் கிளைத்தலைவர் திரு. ஆ. திரவியநாயகம் தலைமையில் நடைபெறும். தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த பலபிரமுகர்களும் தாய்ச்சங்க நிர்வாகிகளும் பாராட்டுரை வழங்குவார்கள்.

## வவனியா பிரதம தபாலதிபர் ஓய்வு

(வவனியா)

வவனியா தபால் நிலையத்தில் பிரதம தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு.எஸ். சதாசிவம் முப்பத்திரண்டு வருட சேவையின் பின் இளைப்பாறியுள்ளார்.

அன்னருக்கு தபால் நிலைய ஊழியர்களால் இன்று பிரிவு உபசாரம் அளிக்கப்பட்டது.

மக்கள் மனம்கவரும் பல்வேறு பொருட்களை நியாயவிலையில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்

மின்சார உபகரணங்கள் மின்னியல் பொருட்கள், காகிதாதிகள் பாடசாலை உபகரணங்கள்

அன்பளிப்புப் பொருட்கள் அனைத்திற்கும்

அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உத்தரவுபெற்ற வியாபாரிகளும், மின்சார ஒப்பந்தகாரரும், விற்பனையாளரும்)

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(போன்: 8291 தந்தி: ''வாணர்சன்ஸ்''

(கடைத்தெரு பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக)

தலைமையகம்:

பேர்ள் லேட்ஸ் - அம்பலவாணர் சன்ஸ்

78, மலிபன் வீதி, கொழும்பு 11.

போன்: 24821 — 28244

லெட்சுமிபவான்,

97, ஒல்ஹொட் மாவத்த, — — கொழும்பு - 11

28-4-82 வரை
வெல்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
ஜெமினி – விஜயா
ராமு

இரண்டாவது வாரம்
ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாவன்
தில்லுமுல்லு

Regal
Daily 10-30, 2-15, 4 30,
7-00 9-30
Kirg Douglas
in
THE FURY
விரைவில்!
கயலும் கயரும்
[கலர்]
மலையாளப்படம்

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
TARZAN THE APE MAN
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி – விஜயா
ராமு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
நானும் ஒரு பெண்

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
ஜெய்சங்கர்...ஜெய்சித்ரா...சுருளி...மனோரமா
உங்கள் விருப்பம் (புதிய பிரதி)
—நகைச்சுவைச் சித்திரம்—

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன் - விஜயா - நாகேஷ்
சர்வர்சுந்தரம் (புதிய பிரதி)
வெகுவிரைவில் அலைகள் ஓய்வதில்லை

ராஜா தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
(யாழ்ப்பாணம்)
சிவாஜி சிவகுமார் காவல் தெய்வம் (புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
''காதல் தியாகத்திலேதான் முழு வடிவம்பெறுகிறது!'' பார்ப்பதற்கு மனங்கவரும் வண்ணக் காட்சிகளும், கேட்பதற்கு இனிய பாடல்களும், உணர்வதற்கு கருத்தாழம் நிறைந்த உரையாடல்களும், மொத்தத்தில் அற்புதமான திரைக் காவியந்தான் நட்சத்திரம்!
இப்பொழுது 4வது வாரமாக வெற்றிநடைபோடுகிறது
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

## 96 பேர் விண்ணப்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடபிராந்திய தொழில் நீதிமன்றத்தில் ஒரு சுருக்கெழுத்தாளர் பதவிக்கு 96 பேர் போட்டிப் பரீட்சையிற் பங்குபற்றுகின்றார்கள்.

கொழும்பிலே இருந்து (நீதி அமைச்சிலிருந்த) இப்பரீட்சையை நடத்துபவர்கள் சமுகங்கொடுத்துள்ளார்கள் 19ம் திகதி தொடக்கம் தொடர்ந்து 4 நாட்கள் சாவகச்சேரித் தொழில் நீதிமன்றத்தில் நடைபெறுகிறது.

## கிராமோதய சபை தலைவர்

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு கிராமோதய சபைத்தலைவராக திரு. சதா. நடராசா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் வானொலிப்பொறியியலில் பட்டம் பெற்றவராவர். இலங்கையில் வானொலி பொறியியல் போதனாசிரியராகவும், லண்டனிலுள்ள ஆகாய விமானத் தொழிற்சாலையில் பொறியியல் பரிசோதகராகவும் கடமையாற்றியவர். இவர் ஒரு சிறந்த சமூகசேவையாளராவார்.

# சைக்கிள் 'பாரில்' பயணம் செய்தவர் பரிதாப மரணம்!

(பண்டத்தரிப்பு)

சைக்கிள் முன்பக்க பாரிலிருந்து பிரயாணம் செய்தவர் சைக்கிளின் 'போக்' எனப்படும் உறுப்புத் திடீரென முறிந்ததினால் நிலத்தில் விழுந்து மண்டை உடைந்த நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்தவரும், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் வேலைபார்ப்பவருமான ஆசைப்பிள்ளை நடராசா என்பவரே இவ்வாறு பரிதாபகரமான முறையில் இறந்தவராவார். இவரது மரணவிசாரணை யாழ் அரசினர் வைத்தியசாலையில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

காலஞ் சென்றவர் காலையில் தமது நண்பர் ஒருவரின் சைக்கிள் முன்பக்க பாரிலிருந்து காங்கேசன்துறைக்கு வேலைக்குப் புறப்பட்டுச் சென்றதாகவும் பண்டத்தரிப்புச் சந்தைக்குச் சமீபமாகப் போய்க் கொண்டிருந்தபோது திடீரெனச் சைக்கிளின் ''போக்'' உடைந்து முறிந்ததாகவும், இதனால் காலமானவர் கீழே விழுந்து மண்டை உடைந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியதாகவும் அபாயகரமானநிலையில் பலத்த காயங்களுடன் யாழ்.அரசினர் வைத்தியசாலையில் அவரை அனுமதித்தபோது அங்கு அவர் மரணமடைந்துவிட்டதாகவும் சாட்சியங்கள் மூலம் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. விபத்து மரணம் என்று விசாரணை முடிவில் தீர்ப்பு வழங்கப்பட்டது.





அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில்நடைபெற்ற புதுவருடக்கலைவிழாவில் யாழ். கலாஷேத்திரா நடன ஆசிரியர் கீதாஞ்சலி வி. கே. நல்லையாவின் மாணவ மாணவியரின் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. சட்ட மாணவன் க. ராதாகிருஷ்ணனின் சிவ தாண்டவத்தையும், செல்வி சத்தியராணி சபாரத்தினத்தின் அபிநயத்தையும் இங்கு காண்க.

# நல்லூரில் இன்று திறந்த வெளியரங்குத் திறப்பு விழா

(அரியாலை)

நல்லூர் சங்கிலியன் மன்றத் திறந்தவெளியரங்கை இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும், நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. மு. சிவசிதம்பரம் மங்கல விளக்கேற்றித் திறந்து வைப்பார்கள்.

மன்றத்தலைவரும் சட்டத்தரணியுமான திரு. கனக. கேசவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர், இங்கிலாந்தைச் சேர்ந்த திரு. எஸ். கதிர்காமநாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைப்பார்,

மன்றக் கீதத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீனஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சிவஸ்ரீச. குமாரசுவாமிக் குருக்கள், கோப்பாய்த்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு ஆலாலசுந்தரம், யாழ்.மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள், புதிய திறந்தவெளியரங்கில் செல்வி நளாயினி இராசதுரையின் மாணவிகளது பரத நாட்டியமும், கே. எஸ்.பாலச்சந்திரனின் நகைச்சுவைக் கதம்ப நிகழ்ச்சிகளும், ஈழநல்லூர் சுப மணாளனின் ''பாவம் சட்டம்பியார்'' என்ற நாடகமும், வானொலிக் கலைஞர் குமார் தனபாலின் ''சிலர் வெளியே இருக்கிறார்கள்'' என்ற நாடகமும் நடைபெறவிருக்கின்றன. (அ)

## இப்பகுதியில் நான்கு கல்லூரிகளுக்கு தொலைக்காட்சி

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்திலுள்ள நான்கு கல்லூரிகளுக்குத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்குக் கல்வித் திணைக்களம் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளே தொலைக்காட்சிப்பெட்டிகளை விரைவில் பெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா மேற்கொண்டுள்ளார்.

## வீரசிங்கம் கோஷ்டி வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு விரசிங்கம் குழுவுக்கும், யப்பான் குழுவுக்குமிடையே நடைபெற்ற 3வது ஆண்டு மென்பந்தாட்டப் போட்டியில் யப்பான்கோஷ்டி சகல விக்கட்டுகள் நஷ்டத்திற்கு மொத்தம் 31 ஓட்டங்களைப் பெற்றது. வீரசிங்கம் கோஷ்டியினர் 210 ஓட்டங்களைப்பெற்று ஒரு விக்கட்டாலும் 179 ஓட்டங்களாலும் தோற்கடித்தனர். காப்டன் வீரசிங்கம் ஆட்டமிழக்காமல் விளையாடினார்

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது. [அ]

## மருத்துவக் கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்றுவரும் யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் கண்காட்சி இம் மாதம் 27ந் திகதி செவ்வாய்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் மருத்துவக் கண்காட்சி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணிவரை நடைபெறும். நுழைவுச் சீட்டு இரவு 8 மணி வரை விற்பனை செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## உப அஞ்சல் அதிபர்கள் சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நடைபெற்ற இலங்கை உப அஞ்சல் அதிபர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:– கோப்பாய் எம். பி. திரு. மு, ஆலாலசுந்தரம், தி. க. ராஜலிங்கம், தலைவர் திரு. ரி. சிவசுப்பிரமணியம், உபதலைவர்கள்: திரு. ஜோர்ஜ் வாசிங்டன்' திரு. ஆர். இராஜரத்தினம், செயலாளர்:– திரு. க. சிவஸ்கந்தா, உபசெயலாளர்:– திருமதி சாவித்திரி இராசரத்தினம் பொருளாளர்:– திரு. மா. பாக்கியராயா. 11 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர், (கு)

## சுவரொட்டிப் போட்டி

[வவனியா]

கடற்றொழில் அமைச்சின் கரையோரப் பாதுகாப்புபிரிவு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கல்வி அமைச்சு என்பனவற்றால் நடத்தப்படும் 'உலக சூழல்' தினத்தினையொட்டி சுவரொட்டிப்போட்டிகளைப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தவுள்ளது.

இது சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திரு அநுரா வீரரத்தின சகல விபரங்கள் அடங்கியசுற்றறிக்கையினை வெளியிட்டுள்ளார். [அ]

## தற்கொலை

(நல்லூர்)

வாழ்வில் விரக்தியுற்ற வாலிபர் ஒருவர் நஞ்சிடம் தஞ்சம் புகுந்த பரிதாபகரமான சம்பவம் ஒன்று சண்டிலிப்பாயில் நிகழ்ந்துள்ளது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜி. ரஞ்சன் (வயது–27) என்ற திருமணமானவரே இவ்வாறு மரணமானவராவார்.

தினமும் மதுபோதையில் வந்து தனது மனைவியுடன் தகராறு செய்யும் இவர் சம்பவதினமும் மதுபோதையில் வந்து கலாட்டா செய்ததாகவும், தான் நஞ்சுகுடிக்கப் போவதாகக் கூறிவந்ததாகவும் திடீரென நஞ்சை அருந்தியதாகவும் மனைவியும் சகோதரியும் தடுத்தும் அவர் நஞ்சருந்திவிட்டதனால் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு மரணமானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கிளிநொச்சி – திருவையாற்றில் சர்வோதயத்திற்கு அண்மையில் 1½ ஏக்கர் நீர் வசதியுள்ள காணி உண்டு. விலையைக் குறிப்பிட்டு எழுதவும். M. காலித், 146, காதி அபூபக்கர் றேட், யாழ்ப்பாணம். 2968

கோண்டாவில் பலாலி வீதிக்கு அண்மையில் நான்கு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரு பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளலாம். விபரங்களுக்கு: R. கமலநாதன்–சட்டத்தரணி, திருநெல்வேலி கிழக்கு. 2969

நல்லூர் தெற்கு நாவலர் வீதியில் 3½ பரப்புக் காணி முழுதாகவோ, துண்டாகவோ உடன் விற்பனைக்கு. பரப்பு 1¼ லட்சம் அல்லது உங்கள் விலையை அறிவிக்கவும். விண்ணப்பிக்க: விளம்பர இல:2900 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2900

மிருசுவில் தெற்கு விடத்தற்பனையில் 40 பரப்பு நல்ல நிலையில் உள்ள காணி தென்னை, மா, பலா ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. விநாயகமூர்த்தி ஆசிரியர், எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள். 2944

சுண்டிக்குளி கொழும்புத்துறை வீதி, 2¼ பரப்பு வெற்று நிலம்; நல்ல தண்ணீர். இ. கோபாலரத்தினம், 125, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. 2953

எழுதுமட்டுவாள் வடக்கு (அப்புக்காத்து தோட்டம்) கண்டி றோட்டிற்கு அண்மையில் 10 ஏக்கர் (160 பரப்பு) தென்னந்தோட்டம். புதிதாக நடப்பட்ட 600 மூன்று, நான்கு வருடத் தென்னம் பிள்ளைகள், வயல், நாற்புறம் பாதுகாப்பான வேலிகள் ஆகியவற்றுடன் விற்பனைக்குள்ளது. நேரில் தொடர்பு கொள்ளவும்: நா. மயில்வாகனம், 383 A, நாவலர் வீதி, (நல்லூர் குறுக்குத் தெருவுக்கு அருகாமை) யாழ்ப்பாணம். 2964

மியூசிக் கோன் – இத்தாலியன் 5 துண்டுகள். தொடர்பு கொள்ளவும்: சமுத்திரா ரேட்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2977

பிலகார ரெசோக்கேஸ் 6×4×20'' காசுக் கவுண்டர் 6' நீளம் 4' உயரம், வொயிலர் எலக்ரிக் செற் தோசைக்கல். K. பாலசிங்கம், 26, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2970

அராலி வடக்கு, பிரதான வீதியில் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து 1 மைல் தூரத்தில் வீட்டுடன் 3½ பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. பஸ்ஸ்ராண்ட் முன்னால் உண்டு. விபரங்களுக்கு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 620 (2977)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள 86–ம் இலக்கக் காணி ¾ பரப்பு வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. சங்கரப்பிள்ளை, 51/2, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 2974

## விற்பனைக்கு

முதல்தரமான அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. 151, 2–ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2972

புதிதாக கட்டப்பட்ட கோட்டா அரிசி ஆலை விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும் விபரங்கட்கும் சாந்தி மில் வட்டுக்கோட்டை. 2955

இருபாலை புதுறோட்டில் 10 பரப்பும், அரியாலை கிழக்கில் 47 பரப்பு காணியும் விற்பனைக்கு உள்ளது. 171, குருசோ வீதி, சுண்டிக்குளிக்கு, தொடர்பு கொள்ளவும். 2958

அரியாலை கிழக்கு நாவலடியில் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ப. திருநீலகண்டன், 76, இலந்தகுளம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம். 2942

A 40 கார் விற்பனைக்கு அல்லது ஜீப்பிற்கு மாற்றுவதற்குண்டு. தினமும் 3 மணிக்குப் பின் மாத்தற பேக்கவுஸ் சன்னுகத்தில் பார்வையிடலாம். 2779

## FOR SALE

Set of Home Study course from U. K. for section (B) of I. C. M. A. Available at Sri Kantha Book Depot, 213, K. K. S. Road, Jaffna. 2971

## பயிற்சி

றேடியோ — டெலிவிசன். வெல்டிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் (சிறந்த செய்முறைப் பயிற்சியுடன்) ஆரம்பம் 26–4–82 இருபாலாரும் சேரலாம் நேரில் வரவும். நாஷனல் அக்கடமி மொம்சாக்கட்டிடம் (விவேகானந்த அச்சகம் முன்பாக) 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2940

## வகுப்பு

3–5–82 டெலிவிஷன் வகுப்புகள் செய்முறைப் பயிற்சியுடன் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கட்கு: AUTO COOL ENGINEERS, (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். 2943

## CLASS

C. E. I. Part I and II (Engineering) May 1983. B.Q. Stage I and II June 1983. City and Guilds Electrical Part II May 1983. Graduateship in Chemistry Part I Dec. 82 (நடைபெறுகின்றது.) வகுப்புகள் ஆரம்பம் :– 02–05–1982, காலை 9–00. விபரத்துக்கு Jaffna Academy of Science-Technology, (சாந்தி சினிமாவுக்கு அருகில்), 22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2933

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இலவசம்

பழைய சுண்ணாம்புச்சுவரில் உடைத்த மக்கி இலவசமாக வழங்கப்படும். பொழிந்த வெள்ளை முருகக்கல் குறைந்த விலையிற்பெறலாம். விபரங்களுக்கு 45, சிவகுருநாதர் வீதி யாழ்ப்பாணம். 2941

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுள்ள மூன்று படுக்கை அறைகள் கொண்ட புதிய வீடு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வாடகைக்கு உண்டு. உடனே தொடர்பு கொள்ளவும்: அரசரத்தினம், ''கந்தன் அருள்'', 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7175, 7537 (2962)

இரண்டு பெண்களுக்கு சாப்பாட்டுடன் அறை வாடகைக்கு உண்டு. நேரில் வரவும். 1215, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (பூனரி மரத்தடி) 2931

யாழ். பெரியகடையில் (Business Store room, firm Tutory) இவைகளுக்கேற்ற அறைகளும் மேல் மாடிக் கட்டிடமும் வாடகைக்குண்டு. விபரம் — 142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2965

## தேவை

பகல் 12–30 முதல் மாலை 6–30 வரை பகுதிநேரக் காசாளராக கடமையாற்ற ஒருவர் வேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் 28–4–82க்கு முன்னர் நற்சான்றிதழ்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும் சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ராணிதியேட்டர் அருகாமை யாழ்ப்பாணம். 2948

## இணுவையூர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்காலத்தில் சைவ நெறி விளங்குவதற்கு சொல்லொணாத துயரங்கள் இருந்தும் வாணவர்கரியவளான நிறை பெரும் கரகநாயகி பேரொளி பரப்பி வந்தாள்.

இக்காலத்தில் வாழ்ந்தவர் கதிர்காமசேகரர் என்று அளவுப்பெயர் கொண்ட சின்னத்தம்பிப் புலவர் சிவகாம சுந்தரி பதிகம் இளந்தாரி புராணம் ஆகிய நூல்களை இறைவனடி சமர்ப்பித்தவர் அவர் ஒல்லாந்தர் காலத்தில் சிவகாம சுந்தரி தாசனான புலவர் சிறையில் இடப்பட்டார். புலவர் சிறையெனும் துன்பக் கேணியில் இருந்தவாறே அன்னையிடம் தன்னைச் சிறையிலிருந்து விடுதலை தருமாறு பல கவிதைகளை யாத்து.

இற்றை வரையும் தனியே<br>
யான வருந்த<br>
வெங்கொளிந்தாய்<br>
சிற்றிடை மின்னேசிங்வாம,<br>
சுந்தரியே<br>
எனவேண்டி<br>
துப்பூட்டு மென்றனது<br>
துன்னூர் சிறைப்படுத்தும்<br>
அப்பூட்டுத்தீயப் பதைப்பார்<br>
சிறை மீட்டிருந்தாய்<br>
இப்பூட்டுத் தீயவென்<br>
சிறையை நீக்கியருள்<br>
செப்பூட்டும் பொற்றூட<br>
சிவகாம சுந்தரியே

என்று அன்னையிடம் சரண் புக, சிறை வாசல் தானாகவே விலகி புலவர் பெருமான் வெளியேற இடமளித்தது. அற்புத இறைவியினை அன்னை அன்பு இங்கு தெளிவாகின்றது.

சின்னதம்பிப் புலவரையொட்டிய வரலாறோ, விமர்சனமோ இன்னும் செவ்வனே செய்யப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலுள்ள கிராமங்களுள் இக்கிராமத்தில் வைரவப் பெருமான் வழிபாடும் நிறைந்து விளங்குகின்றது. இது ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பொலிவு பெற்று விளங்கியது.

இணுவையம்பதியிலே கோயில் கொண்டிருக்கும் அருட்பெரும் கடலாம் சிவகாமியம்மனுக்கு இப்பொழுது அமைத்தள்ள அழகிய சித்திரத்தேர் குறிப்பிடற்பாலது. இதுவே ஈழத்திலுள்ள மிக உயரமான தேர் என்றும் கொள்ளப்படுகின்றது. இலங்கையிலேயே சிவகாமி அம்மன் எனும் பெயர்பெற்ற கோயிலும் இதுவேயாகும்.

இணுவைச் சமய நெறிக்குத் தனித் தன்மையுண்டு. இக்கிராமத்துக்கு அணிகலன்களாக விளங்குகின்ற கோயில்கள் கிராமிய சமுதாய வாழ்வோடும், விளைநிலங்களாகும் உற்பத்தி முறையோடும் நெருங்கிய தொடர்புகொண்டு மன்பதை நெறியாகிக் கோயில்கள் மக்களின் பக்தி அறிவு நிலைக்களங்களாக உருவாகின.

காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி, இணுவை சிவகாமியாகி அம்பாள் அருள்புரியும் திருக்கோலக் காட்சியே வாழ்க்கைக் காட்சியாகும்.

## தேவை

யாழ். வண்ணார்பண்ணைச் சுற்றாடலில் வீடு கட்டுவதற்குரிய நிலம் தேவை. வீட்டுடனாயினும் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: கோபாலகிருஷ்ணன், 187, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2963

நெல் குற்றும், மா, மிளகாய் அரைக்கும் கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும். சாந்திமில், வட்டுக்கோட்டை. 2954

களஞ்சியப் பொறுப்பாளர்: நியூரோன் இலெக்ரிக்கல் வர்த்தக ஸ்தாபனத்தின் விநியோக களஞ்சியத்திற்கு பொறுப்பாளர் தேவை. யாழ்நகரத்தில் அல்லது அண்மையிலுள்ள, 55 வயதில் இளைப்பாறிய திறமையுள்ள அரசாங்க ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. களஞ்சிய அனுபவம் விரும்பத்தக்கது. நியமிக்கப்படுபவர் பிணைப்பணம் கட்டவேண்டும். மாத வேதனமாக ரூ. 600/– கொடுக்கப்படும். எழுத்து மூலம் மாத்திரமே தொடர்பு கொள்ளலாம். விற்பனை முகாமையாளர், நியூரோன் இலெக்ரிக்கல்ஸ், 141, 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2975

## மத்திய கிழக்கு வேலை வாய்ப்புகள்

மத்திய கிழக்கு நாடுகளில் பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும்.

டீசல் மெக்கானிக்குகள், எலக்ரீசியன்ஸ், வெல்டேர்ஸ், மேசன்மார், காப்பென்ரர்மார், றிக்கேஸ் (RIGGERS), பைப் பிற்றர்ஸ், பார்பென்டர்ஸ்.

கூலியாட்கள், இரும்புக் கம்மாலை வேலை செய்பவர்கள், கனரக வாகனச் சாரதிகள், கிறேன் ஒப்பரேட்டர்கள், மற்றும் புல்டோசர், பே லோடர்ஸ் ஒப்பரேட்டர்கள், சமையல்காரர்கள், லிகிதர்கள்.

விண்ணப்பதாரர்கள் 5 அடி 3 அங்குலம் உயரம். — 110 றாத்தல் நிறை, — மார்பளவு 32 அங்குலம் இருக்க வேண்டும். நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை சான்றிதழ் பிரதிகளுடனும், பாஸ்போட் பிரதியுடனும் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

நேரடியான சகல தொடர்புகளும் தடை செய்யப்பட்டுள்ளது. தரகர்கள் தேவையில்லை. நேரடித் தொடர்பு கொண்டால் மனு நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும்<br>
கிடைக்கப்பெற்றதும் தகவல் மறுகடிதத்தில்<br>
அறிவிக்கப்படும்

**Construction & Development Co., Ltd.,**

37, S. De S. JEYASINGHE MAWATHA,<br>
NUGEGODA.

தொழில் லைசென்ஸ் இல: 96.<br>
தொழில் ஆணையாளர் பதிவு இல: FE/1/118

(2973)

## ஆசிரியர்களும்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கம் மட்டுமன்றித் தமது சிறப்பான நாட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் இங்கு இல்லாமையாலும் இங்கிலாந்து, அமெரிக்கா முதவான பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் இடம் தேடுகின்றனர்.

நெருக்கடி என்று நான்கூறியதைப் பற்றிய பொதுவான அபிப்பிராயத்தையே முன்வைத்துள்ளேன். இது சரியானதா உண்மையான நிலையைத் தெளிவுபடுத்துகின்றதா என்பதையே நாம் முதலில் நோக்க வேண்டும். ஆசிரிய–மாணவ தொடர்பு விரிசல் உண்மையில் இருப்பதாகவே எடுத்துக் கொண்டால் இதனை ஓர் அறிவுசால் விரிசல் என்றும், தெரியாமை காரணமாக மாணவர்களின் அறிவுப் பகைப்புலன் ஒடுங்கியமையின் விளைவாக அது ஏற்பட்டது என்றும் கூறுவது சரியா? அநேகமாக எல்லா மாணவர்களும் இளைஞர்களும் தமக்கு பகிர்ந்து கொள்ளும் வாழ்க்கை அல்லது சமூகத்துவம் பற்றிய நோக்கின் அடிப்படை வேறுபாட்டிலிருந்து இது எழவில்லையா? இது பற்றி விளக்க நான் முற்படுகின்றேன்.

[தொடரும்]

## இளம் குடும்பப்பெண்ணின்
# மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம்
# பிரேதபரிசோதனையில் தீர்ந்தது

(வவனியா)

புதுவருட தினத்தன்று வவனியா பூந்தோட்டம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்திய இளம் குடும்பப்பெண்ணின் மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம் பிரேத பரிசோதனைமூலம் நீக்கப்பட்டது.

22 வயதான ரவீந்திரன் ராணி என்ற பிரஸ்தாப பெண் புதுவருட தினத்தன்று வயிற்றோட்டம் கண்டு திடீர் மரணமடைந்தார். விசாரணை எதுவுமின்றிப் புதைக்கப்பட்ட அவரது சடலம் தோண்டி எடுக்கப்பட்டுப் பரிசோதனை செய்யப்பட்டு மரணவிசாரணை நடத்தப்பட்டது.

புதுவருட தினத்தன்று இறைச்சி வாங்கிச் சமைத்துச் சாப்பிட்டதாகவும் இரவு வயிற்றோட்டம் ஏற்பட்டதையடுத்து மரணமானதாகவும், அடுத்தநாள் கணவர் பகுதி கிராமசேவை அலுவலர் திரு. பி. பாலநாதனுக்கு விடயத்தினை முறையிட்டதாகவும், கி. சே. அலுவலர் இதனைப் பொலிசில் தெரிவிக்குமாறு கூறியதாகவும் விஷயம் பொலிசுக்குப் போனதாகவும், ஆனால் இறந்தவருடைய கணவர் கவலையீனமாகச் சடலத்தை அயலவருடைய உதவியுடன் பூந்தோட்டம் மயானத்தில் புதைத்ததாகவும், சென்ற 16ம் திகதி வவனியாப் பொலிசாருக்கு மேற்படி சம்பவம் தொடர்பாக அநாமதேயக் கடிதங்கள் கிடைத்ததையடுத்து பொலிசார் வவனியா திடீர் மரணவிசாரணை அதிகாரிக்குச் சம்பவத்தை தெரியப்படுத்தி விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவந்தது.

பிரேதம் புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். நிரஞ்சன் பரிசோதனை நடத்தினார்.

கணவரது வாக்குமூலத்திலிருந்து இறைச்சி சமைக்கும் போது அப்பச்சோடாவுக்குப் பதிலாகச் சலவைச்சோடா பாவிக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி வயிற்றோட்டத்துக்குக் காரணம் சலவைச் சோடா கலந்த இறைச்சிக்கறி காரணமாயிருக்கலாம் என தெரிவித்தார்.

இறுதியில் இயற்கை மரணம் என மரணவிசாரணை அதிகாரி டாக்டர் எஸ். கே. பாலசிங்கம் தீர்ப்பளித்தார். சார்ஜன்ட் வி. சண்முகசாமி சாட்சிகளை ஆஜர் செய்தார்.

இறந்தவருடைய இரண்டு பிள்ளைகளும் வயிற்றோட்டம், வாந்தி காரணமாக வவனியா அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [அ]

# தமிழ் இளைஞர் பேரவை
# மாநாடு ஜூலையில்

(நல்லூர்)

தமிழ் இளைஞர்பேரவையின் மாநாட்டை எதிர்வரும் ஜூலைமாத இறுதிக்குள்நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இளைஞர்பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டம் கடந்த 17ம் திகதிசனிக்கிழமை செயற்குழு உறுப்பினர் சபா. செந்தில்ராசா இல்லத்தில் மாவை.சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்இளைஞர் பேரவையின் அமைப்பு வேலைகளைச் செய்வதற்கு ஒவ்வொரு உதவிஅரசாங்கஅதிபர் பிரிவுக்கும் ஒருவரை அமைப்பாளராக நியமிப்பதென்றும், தமிழ்இளைஞர்பேரவை, மாணவர் பேரவை உறுப்பினர்களைத் திரட்டி அமைப்பு வேலைகளை ஜூலை மாதத்திற்குள் முடிப்பதென்றும்;

தமிழ் இளைஞர் பேரவையின் இயக்க நிதியாகதமிழர்வாழும் மாவட்டங்களில் கொடித்தினம்நடத்தி மக்களிடமிருந்து ஒரு ரூபா வீதம் ஒரு லட்சம் திரட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.


## போட் ரக்டர் 2000 விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள போட் ரக்ரர் 2000 றெயிலர் உடன் விர்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்:

**நா. சின்னத்தம்பி**
'தவனேசபதி' வறுத்தலைவிளான்,
தெல்லிப்பளை. 2935



## பொலித்தீன் சாக்குகள்

நீடித்த பாவனைக்குகந்த பொலித்தீன் சாக்குகள் விற்பனைக்குண்டு. சணல் சாக்குகளை விட தரத்தில் உயர்ந்தது. சர்வதேச தரத்திற்கு ஒப்பானது. நெல், நவதானியம் போன்றவற்றை நிரப்பி சந்தைப்படுத்துவதற்கும், கோழித்தீன், மீனுணவு, உப்பு போன்ற பொருட்களை நிரப்பி விற்பனை செய்வதற்கும் சிறந்தது. இரு வெவ்வேறு அளவுகளில் உண்டு.

வர்த்தக விசாரணைகள்

**குருடீசல் எஞ்ஜினிஏஸ்**
338, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
2936



## சுபிட்சத்திற்கு வழிகாட்டி

தங்கள் முதலீட்டிற்கு
இதோ ஒரு பொன்னான வாய்ப்பு

நம்பிக்கை - நாணயம் - அநுபவம்

**SHABRA UNICO**
**FINANCE LIMITED**

[இலங்கை மத்திய வங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்]

விபரங்களுக்கு:—
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு-4
Tel:— 589310


## இந்துமாநாட்டு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் திரு. வி, தருமலிங்கம் அவர்களை வரவேற்பார்.

துர்கா தரிசனம் முடிவடைந்த பின்னர் மேற்படி தேவஸ்தானத்தில் மதிய போசன விருந்து பேராளர்களுக்கு வழங்கப்படும்.

பிற்பகல் 3–15க்கு நல்லை ஆதீனம், ஆறுமுக நாவலர் மணி மண்டபம் ஆகியவற்றைப் பேராளர்கள் பார்வையிடுவர். பி. ப. 4 மணிக்கு நல்லூர்க்கந்தசுவாமி கோவில் ஆலயத்தில் வழிபாடு நிகழ்த்தப்படும்.

நல்லூர் வரும் பேராளர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. வெ. யோகேஸ்வரன், திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோர் வரவேற்பார்கள். (கி)

## தமிழ்நாட்டைத்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் கன்னடமும், தெலுங்கும் பயில நாம்என்றும்அனுமதிக்க மாட்டோம். எமக்கு தமிழ் நாட்டில் வேலை கிடைக்காவிடில் நாங்கள் திரும்பியும் இலங்கைக்கே வரவிரும்புகிறோம்'' என்று தேவராஜா என்ற அத்தொழிலாளி கூறினார்.

திருச்சியிலுள்ள குடிபெயர்ந்து வந்தவர்களுக்கான முகாமிற்கு சாவகச்சேரி எம். பி, திரு. நவரத்தினம் விஜயம் செய்தபோது பதுளையிலிருந்து அங்கு சென்றுள்ள திரு. தேவராஜா கண்ணீர் விட்டுக்கதறி அழுதார்.

ஈராக்கிற்கும், நைஜிரியாவுக்கும் விஜயம் செய்த சாவகச்சேரி எம. பி. திரு.வி.என். நவரத்னம், திருச்சியில் தங்கி இந்த முகாமிற்கு விஜயம் செய்தார்.

# பிரதேச சபைத் தலைவர்கள் தெரிவு இப்போதைக்கில்லை?

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் பிரதேச சபைத்தலைவர்கள்தெரிவு இப்போதைக்கு நடைபெற மாட்டாது என்று தெரிய வருகிறது.

இம் மாவட்டத்தில் கிராம சேவை அலுவலர் பிரிவு தோறும் தெரிவுசெய்யப்பட்ட கிராமோதய சபைத்தலைவர் தெரிவில் 13 கிராமோதய சபைத்தலைவர்களின் தெரிவிற்கு இன்னும் முடிவு ஏற்படாததைத் தொடர்ந்தேஇத் தாமதம்ஏற்பட்டு இருப்பதாக அறியக் கிடக்கிறது.

பிரதேச சபைத் தலைவர்கள் கிராமோதய சபைத்தலைவர்கள் மூலமாகவே தெரிவு செய்யப்பட இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்று

[பச்சிலைப்பள்ளி]

அகிலஇலங்கை தமிழ்பேசும் உப தபால் அதிபர்கள் தொழிற்ச்சங்க யாழ்ப்பாணக்கிளை உப அஞ்சல் அதிபர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் மாகாண அத்தியட்சகர் திரு. ஏ. சி. கந்தசாமி தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகின்றது. கருத்தரங்கு முடிவில் நடைபெறும் போட்டிப் பரீட்சையில் பங்குபற்றி முதல் ஐந்து இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவிருக்கின்றன.

°° °°

[கிளிநொச்சி]

கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேடபொதுக்கூட்டம் இன்று ஞாயிறு காலை சங்கத்தலைவர் திரு. த. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

°° °°

[பண்டத்தரிப்பு]

சில்லாலை வண. யோசப்வாஸ் சபையின் 9வது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை சில்லாலை கதிரை மாதா ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

## நல்லூரில் அருளுரை



(யாழ்ப்பாணம்)

கொழும்பு உலக இந்து மாநாட்டில் கலந்துகொள்ள வருகைதந்துள்ள ஸ்ரீ பால சிவயோகேந்திர மகராஜ் விஸ்வசாந்தி தேஜின் அருளுரை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் யாழ்ப்பாணம் திவ்வியஜீவன சங்கமண்டபத்தில் இடம் பெறும். மகராஜ் ஆங்கிலத்தில் அருளுரை வழங்குவார்.

# இராணுவ மோதல் ஏற்படும்!

லண்டன், ஏப். 24

பிரிட்டினுக்கும் ஆர்ஜன்டினாவுக்குமிடையில் இராணுவ மோதல் ஏற்படும் என்று வாஷிங்டனிலிருந்து இங்கு வந்துசேர்ந்த பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

இந்த முகாம்களில் தங்கியுள்ளவர்களின் பல தரப்பட்ட பிரச்னைகளையும் கேட்டறிந்தார். புதுடில்லியிலும், தமிழ் நாட்டிலும் அரசாங்க அதிகாரிகளை சந்தித்து இதற்கான நடவடிக்கை எடுப்பதாக முகாமிலுள்ளவர்களுக்கு ஆறுதல் கூறினார். (மட்டுநி)

## குழுநியமிக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டி சிவசுப்பிரணிய சுவாமி கோயிலில் சாதுக்கள் தரிசனம் இடம்பெற்றபோது ஆந்திராவிலிருந்து வந்துள்ள சிறிபால சிவயோகேந்திர மகராஜ் சில அதிசயிக்கத்தக்க சித்துக்களை செய்து காட்டினார்.

திடீரென பிள்ளையார் சிலையொன்றை கையில் தோற்றுவித்த யோகியார் அதனைஇந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் கையளித்தார். கெண்டியொன்றைத் தோற்றுவித்த சுவாமிகள் அதனை சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு அன்பளிப்புச் செய்தார்.

### சாதிகள் பற்றிய தீர்மானங்கள்

இந்துசமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டிக்கும் தீர்மானமொன்று அகில உலக இந்து மாநாட்டு ஆய்வரங்கின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இன்று விவாதிக்கப்படவிருக்கின்றது.

இந்துமதத்தில் ஏனைய மதங்களினால் ஏற்படும் ஆக்கிரமிப்பு பற்றியும் ஒரு தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்
## செலஸ்டினா முத்து இராஜநாயகம்

செலஸ்டினா முத்து இராஜநாயகம் காலமானார். இவர் காலஞ்சென்ற B. J. T. இராஜநாயகம் அவர்களின் மனைவியும், வண. அன்ரன் இராஜநாயகம் (அதிபர், கென்றி அரசர் கல்லூரி, இளவாலை), வண. மகேந்திரன் இராஜநாயகம் [கட்டளைக் குரவர், புனித அந்தோனியார் கோயில், பாஷையூர்], ஜெயா, பாலா, றதினி, யோகினி ஆகியோரின் அன்புத் தாயாரும், M. அந்தோனிமுத்து [அரசாங்க அதிபர், மட்டக்களப்பு], J. A. வில்லவராஜா [கலால் பொறுப்பதிகாரி, சங்கானை], மலர், மாலினி ஆகியோரின்அன்புமாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 26ம் திகதி திங்கட்கிழமை மாலை 4–30 மணிக்கு அடைக்கலமாதா கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

2983


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட் ...காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 25-ம் திகதி ... வெளியிடப்பட்டது. Registered as News Paper. ...he General P.O. Sri Lanka Regd. Q. B. 100236/81. P.O. Box 49, ... 7, 889, 8186.